**முதன்மை சார்பு நீதிமன்றம், ஈரோடு, ஈரோடு மாவட்டம்.**

O.S.No.567/2021 பெயர் : சக்திராதா நாள் : 21.04.2026

வா.சா.1 ஆஜர். சத்திய பிரமாணத்தின் பேரில் விசாரணை செய்யப்பட்டார்.

**வா.சா.1 : பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை:-**

நான் ஆங்கில இலக்கணத்தில் Phd படித்துள்ளேன். நான் கொங்கு இன்ஜியரிங் கல்லூரியில் உதவி பேராசிரியராக பணிபுரிந்து வருகிறேன். எனது மாத சம்பளம் ரூ.58 ஆயிரம் ஆகும். நான் 1-ம் பிரதிவாதியை திருமணம் செய்து, வாதி பிறந்த பின்னிட்டு, எங்களுக்குள் ஏற்பட்ட கருத்து வேறுபாட்டின் காரணமாக நான் விவாகரத்து பெற்றேன். நான் விவகாரத்து பெற்ற போது, வாதிக்கு 11 வயது இருக்கும். எனக்கும், 1-ம் பிரதிவாதிக்கும் மட்டும் தான் கருத்து வேறுபாடு இருந்தது, எனக்கும், 2, 3 பிரதிவாதிகளுக்கும் எவ்வித கருத்து வேறுபாடும் இல்லை. என்னுடன்தான் என் தாய், தந்தை வசித்து வருகிறார்கள். என்னுடன் பிறந்த சகோதரர் தனியாக வசித்து வருகிறார். நான் கல்லூரியின் குடியிருப்பில் வசிக்கவில்லை, தனியாக வசித்து வருகிறேன். என் மகளுக்கு தற்போது 17 வயது ஆகிறது. என் மகன் பெரிய மனுசி ஆனபோது பெருந்துறையில் உள்ள கும்மு மஹாலில் வைத்து சீர்செய்தேன். அதற்கு 1-ம் பிரதிவாதியை நான் அழைக்கவில்லை, 2, 3 பிரதிவாதிகளையும் அழைக்கவில்லை. அழைப்பிதழ் அடிக்கவில்லை. எனது மாமனார், மாமியார் 1-ம் பிரதிவாதிக்கு இரண்டு பெண் குழந்தைகள் உள்ள பெண்ணை திருமணம் செய்து வைத்ததால், எனக்கு பிடிக்கவில்லை. விவகாரத்துக்கு பின்னிட்டு வாதி, 2, 3 பிரதிவாதிகளை பார்க்க போகவில்லை என்றால், சரிதான். விவகாரத்துக் கோரி நான்தான் மனு தாக்கல் செய்தேன், என் கணவர் விவகாரத்து கோரவில்லை. நான் விவாகரத்து பெற்ற காரணத்தினால்தான், 1-ம் பிரதிவாதி திருமணம் செய்யவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது என்றால், சரிதான்.

நான் விவாகரத்து செய்யாமல் இருந்திருந்தால், 1-ம் பிரதிவாதி சட்டப்படி திருமணம் செய்திருக்க முடியாது என்றால், சரிதான். நான் விவாகரத்து மனு தாக்கல் செய்வதற்கு முன்பு யாராவது பெரியவர்களை வைத்து சமாதானம் பேசப்பட்டதா என்றால், 2, 3 பிரதிவாதிகளை மட்டும் நான் பேசினேன். என் மகளுக்கு 1,2,3 பிரதிவாதிகளின் பங்காளிகளை அழைத்து சீர்செய்தேன். மேற்படி பங்காளிகளை வைத்து நான் விவாகரத்திற்காக எந்தவொரு பேச்சுவார்த்தையும் செய்யவில்லை. 1-ம் பிரதிவாதி என் மாமனார், மாமியாருக்கு ஒரே மகன் என்றால், சரிதான். 1,2,3 பிரதிவாதிகளின் வருமானம் வாதிக்கு தான் என்று சொன்னால், சரியல்ல. 1-ம் பிரதிவாதியை 2-வதாக திருமணம் செய்துக்கொண்ட பெண் 1,2 பிரதிவாதிகளின் ஊரில் வசிக்கவில்லை என்றால், சரிதான், 1-ம் பிரதிவாதியும், அந்த பெண்ணும் திருப்பூரில் வசித்து வருகிறார்கள். அவர்களுக்கு திருமணம் ஆகி சுமார் 5 வருடங்கள் இருக்கும். 5 வருடங்களும் 1-ம் பிரதிவாதி திருப்பூரில் தான் வசித்து வருகிறார். 1-ம் பிரதிவாதி விவசாயம் செய்து வருகிறாரா என்றால், இல்லை. நானும் தாவா சொத்திற்கு சென்று எந்தவித விவசாயமும் செய்யவில்லை. தாவா சொத்தின் சர்வே எண் தெரியாது, செக்குபந்தி தெரியும், தாவா சொத்து அமைந்துள்ள இடம் தெரியும். தாவா சொத்து தற்போது 2, 3 பிரதிவாதிகளின் அனுபவத்தில் உள்ளது. வழக்கு தாக்கல் செய்த சமயம் தாவா சொத்திற்கான வில்லங்க சான்று எடுத்துப் பார்த்தேன், அதன்பிறகு மீண்டும் எடுத்து பார்க்கவில்லை. தாவா சொத்து ஆதியில் யாருக்கு பாத்தியப்பட்ட சொத்து என்றால், முத்துசாமி கவுண்டரால் கிரையம் பெறப்பட்ட சொத்துக்கள். முத்துசாமி கவுண்டருக்கு எத்தனை நபர்கள் வாரிசுகள் என்றால், அவர் மனைவி சின்னம்மாள், மகன் துளசிமணி, மகள் சாமியாத்தாள், 2-ம் பிரதிவாதி பழனிசாமி ஆவார்கள். பூர்வீக சொத்தை அவர்கள் எப்படி பிரித்துக் கொண்டார்கள் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால், தெரியும், சின்னம்மாளும், அவரது மகள்

சாமியாத்தாளும் தங்கது 1/4 பாகத்தை துளசிமணிக்கும், பழனிசாமிக்கும் விடுதலை செய்து கொடுத்து விட்டார்கள். துளசிமணிக்கும், பழனிசாமிக்கும் பூர்வீக சொத்தில் 4-ல் 1 பங்கு தான் பாத்தியம் என்றால், சரிதான். மீதி சொத்துக்கள் துளசிமணிக்கும், பழனிசாமிக்கும் அவரது தாய் மற்றும் சகோதரி விடுதலை செய்து கொடுத்துவிட்டார்கள் என்றால், சரிதான். சகோதரி பங்கைப்பொறுத்து, நானும், வேறு யாரும் பாகம் கேட்க முடியாது என்றால், சரிதான். தாவாவில் துளசிமணி, சாமியாத்தாள், சின்னம்மாள் ஆகியோரை தரப்பினராக சேர்க்கவில்லை. நான் முழு சொத்தில் பாகம் கேட்டு தாவா தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரிதான். 1-ம் பிரதிவாதிக்கு பழனிசாமியின் 4-ல் 1 பங்கிலிருந்து அவரது மகனான 1-ம் பிரதிவாதிக்கு 8-ல் 1 பாகம் தான் பாத்தியம் என்றால், சரிதான். அந்த 8-ல் 1 பாகத்தில் தான் வாதி பாகம் கோரமுடியும் என்றால், சரிதான். 3-ம் பிரதிவாதி அலமேலுவை வழக்கில் தரப்பினராக சேர்த்துள்ள காரணம், பூர்வீக சொத்தை அவர் பெயரில் எழுதி வைத்திருந்ததால், அவரையும் தரப்பினராக சேர்த்துள்ளேன். பழனிசாமிக்கு அவரது தாய் மற்றும் சகோதரி மூலம் வந்த 4-ல் 1 பங்கு சொத்து பொறுத்தவரை அவருக்கு தனிப்பட்ட உரிமை என்றால், சரிதான். இந்த வழக்கினை துளசிமணியின் மனைவி துளசியம்மாள், அவரது மகள் சுமதி, மகன் சோமசுந்தரம் ஆகியோர்களை தரப்பினராக சேர்க்கவில்லை என்றால், சரிதான். பூர்வீக சொத்திலிருந்து வந்த சொத்தை 1-ம் பிரதிவாதியும், 2-ம் பிரதிவாதியும் பாகக்கறார் செய்துக்கொண்டார்கள் என்றால், சரிதான். அவ்வாறு பாகக்கறார் மூலம் வந்த சொத்தையும், தானசெட்டில்மெண்ட் மூலம் வந்த சொத்தையும் 1, 2 பிரதிவாதிகள் பாகக்கறார் செய்து, அதில் 2-ம் பிரதிவாதி தனக்கு தானசெட்டில்மெண்ட் மூலம் வந்த சொத்தையும், பாகக்கறார் மூலம் வந்த சொத்தையும் சேர்த்து 3-ம் பிரதிவாதிக்கு தானசெட்டில்மெண்ட் எழுதி வைத்தார் என்றால், சரிதான். மேற்படி சொத்து, தாவாவில் 1-வது அயிட்ட சொத்து என்றால், சரிதான்.

தாவாவில் 2-வது அயிட்ட சொத்து 1.40 சென்ட் மட்டும் தான் எனது கணவருக்கு ஒதுக்கியுள்ளார்கள் என்றால், சரிதான். அந்த சொத்தில் ரீ.ச.159/9-ல் கடந்த 15.02.2021-ம் தேதி அன்று ஆவண எண்.1179/2021-ம் எண்ணாக ஒரு விமல் என்பவருக்கு விற்பனை செய்துள்ள விபரம் எனக்கு தெரியுமா என்றால், தெரியாது. அதேபோல் தாவாவில் 2-வது அயிட்ட சொத்து ரீ.ச.எண்.159/12, 13, 16 அதில் அடங்கிய சொத்துக்களை வெண்ணிலா என்பவருக்கு ஆவண எண்.4127/2015-ல் விற்பனை செய்துள்ளார் என்றால், சரிதான். தாவா சொத்தில் ராயபாளையம் கிராமத்தில் ரீ.ச.எண்.30-ல் 0.83 சென்டை கடந்த 16.02.2021-ம் தேதி அன்று ஆவண எண்.1252/2021-ம் எண்ணாக விற்றுள்ளார் என்றால், சரிதான். என்னுடைய மகளை என் கணவரிடம் ஒப்படைக்க கோரி மாண்புமிகு முதன்மை மாவட்ட நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது என்றால், சரிதான்.

**பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது.**